## பயிற்சிகள்.

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **124** இல் காணப்படும் வலிமிகா இடங்களை அறிதல். வினைத்தொகையிலும் உம்மைத்தொகையிலும் வலிமிகாது என்பதை அறிதல். அதோடு, பக்கம் **125** இல் காணப்படும் கதையில் உள்ள வினைத்தொகைச் சொற்களை அடையாளம் காணுதல். மேலும், இடுபணி **2**, இடுபணி **3** மற்றும் குறைநீக்கல் பயிற்சியையும் செய்தல். உங்கள் விடைகளைத் தொலைவரியில் அனுப்பவும். இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) செவ்வாய் இரவு **8** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

# பாடம் 4 இலக்கணம்

## வலிமிகா இடங்கள் அறிக.

### வினைத்தொகை

வினைச்சொல்லின் பகுதியும் பெயர்ச் சொல்லும் சேர்ந்து வருவதே வினைத்தொகையாகும். வினைத்தொகையில் வலிமிகாது.

எ.கா:

| வினையடி | | பெயர் | | வினைத்தொகை |
|---|---|---|---|---|
| குடி | + | நீர் | = | குடிநீர் |
| வீசு | + | தென்றல் | = | வீசுதென்றல் |
| பாடு | + | பொருள் | = | பாடுபொருள் |
| செய் | + | தொழில் | = | செய்தொழில் |

**வினைத்தொகை மூன்று காலங்களையும் காட்ட வல்லது.**

கடிநாய் → நேற்று கடித்தது
கடிநாய் → இன்று கடிக்கிறது
கடிநாய் → நாளை கடிக்கும்

**கடிநாய்:** இதில் 'கடி' என்பது கடித்தது, கடிக்கிறது, கடிக்கும் என்ற மூன்று காலங்களையும் காட்டவல்லது.

### உம்மைத்தொகை

தொகைச் சொல்லில் 'உம்' என்னும் உருபு மறைந்திருப்பதால் உம்மைத்தொகை எனப்படும். அதில் வலிமிகாது.

எ.கா:

| உம்மைத்தொடர் | உம்மைத்தொகை |
|---|---|
| செடியும் கொடியும் | செடிகொடி |
| காயும் கனியும் | காய்கனி |
| வெற்றியும் தோல்வியும் | வெற்றிதோல்வி |
| நன்மையும் தீமையும் | நன்மைதீமை |

இடுபணி 1

**பின்வரும் கதையில் தவறாக இடம்பெற்றுள்ள வினைத்தொகைச் சொற்களை அடையாளம் கண்டு எழுதுக.**

5.5.7 ● வினைத்தொகையிலும் உம்மைத்தொகையிலும் வலிமிகாது என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

அலைக்கடல் ஓயாமல் அலைகளை உருவாக்கிக் கொண்டிருப்பதுபோல் மனிதர்களாகிய நாமும் சோம்பல் கொள்ளாமல் விடாமுயற்சியுடன் உழைக்க வேண்டும் என்று அமுதன் அண்ணனிடம் கூறிக்கொண்டிருந்தான். கடல் அலையில் அசைந்தாடி வருகின்ற இதமான வீசுத்தென்றலை ரசித்துக் கொண்டிருந்த இவர்களை, எதிர்பாராமல் அவ்விடத்திற்கு வந்த கடிந்நாய் ஒன்று துரத்தத் தொடங்கியது. இவர்கள் அந்த நாயிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஓட்டம் பிடித்தனர். அந்தக் கடலோரத்தில் 'கச்சான் பூத்தே', குடிந்நீர் போன்றவற்றை விற்பனை செய்யும் மூதாட்டி ஒருவர் இச்சிறுவர்களின் அலறலைக் கேட்டு அவர்களுக்கு உதவ முன்வந்தார். தன்னிடமிருந்த உருளைக்கட்டையை அந்த நாயின்மீது வீசி நாயை விரட்டினார். அம்மூதாட்டியின் துணிச்சலைக் கண்ட அவ்விருவரும் அம்மூதாட்டிக்கு நன்றி கூறி இல்லம் திரும்பினர்.

## இடுபணி 2

**கீழ்க்காண்பவற்றைச் சேர்த்து எழுதிடுக; எந்தத் தொகையெனக் குறிப்பிடுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. இடு | + | காடு | = | இடுகாடு | வினைத்தொகை |
| 2. புனர் | + | பொழுது | = | | |
| 3. அண்ணன் | + | தம்பி | = | | |
| 4. ஏவு | + | கணை | = | | |
| 5. சூழ் | + | கடல் | = | | |

## இடுபணி 3

**கொடுக்கப்பட்ட உம்மைத்தொகைச் சொற்களைப் பிரித்தெழுதுக.**

1. ஆதிஅந்தம் = 
2. ஆடுமாடு = 
3. தடாகம் = 
4. உடல்உயிர் = 

## வளப்படுத்துதல்

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

கைகால் | தாய்தந்தை | இடிமின்னல் | குதிரைநாய் | ஓடுங்குதிரை

## குறைநீக்கல்

**பத்தியிலுள்ள உம்மைத்தொகைச் சொற்களை அடையாளம் காண்க.**

சாரணர் இயக்க மாணவர்கள் கடந்த பள்ளி விடுமுறையின்போது மூன்று நாள்கள் காட்டில் முகாமிடச் சென்றனர். அக்காட்டில் பல விதமான மரங்களையும் அதில் காய்த்துத் தொங்கும் காய்கனிகளையும் பறித்துச் சுவைபார்த்தனர். மேலும், பல விதமான மூலிகைச் செடிகொடிகளைப் பறித்துத் தங்கள் அறிவியல் ஆய்வுக்குப் பயன்படுத்தினர்.